# 2017

# செயலாற்றுகை அறிக்கை

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

பொது திறைசேரி

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

கொழும்பு – 01

## உள்ளடக்கம்


**1. அறிமுகம்.................................................................................................................** 1

1.1 நிறுவன அமைப்பு முறை................................................................................................ 1

1.2 நோக்கு................................................................................................................................ 1

1.3 செயற்பணி.......................................................................................................................... 1

1.4 இலக்கு................................................................................................................................ 1

1.5 குறிக்கோள்கள்.................................................................................................................. 2

1.6 நிறுவன கட்டமைப்பு........................................................................................................ 3

1.7 தொழிற்பாடுகள்................................................................................................................ 4

1.7.1 வர்த்தகக் கொள்கைப் பிரிவு.................................................................................. 4

1.7.1.1 வர்த்தகக் கொள்கை....................................................................... 4

1.7.1.2 தீர்வை வரிக் கொள்கை.................................................................. 4

1.7.1.3 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் ............................................. 5

1.7.2 முதலீட்டுக் கொள்கைப் பிரிவு................................................................................ 5

1.7.3 நிருவாக மற்றும் நிதிப் பிரிவு.................................................................................. 6

**2. வர்த்தகக் கொள்கை** 7

2.1 வர்த்தக உடன்படிக்கைகள்................................................................................................ 7

2.1.1 வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான முன்னேற்றம்........................................ 8

2.1.1.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(ISFTA)......... 8

2.1.1.2 பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(PSFTA). 9

2.1.1.3 தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(SAFTA) ................. 9

2.1.1.4 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) ............................. 11

2.1.1.5 வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ……………………………….. 12

2.1.1.6 உத்தேச சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை........... 14

2.1.1.7 உத்தேச இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை… 14

2.1.1.8 உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை ........................................................................... 14

2.2 2017 ஆம் ஆண்டிற்கான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான சர்வதேச வர்த்தகம் ........................................................................................................ 14

2.3 வர்த்தக வசதி ........................................................................................................ 15

2.4 இறக்குமதி தீர்வை வரி கட்டமைப்பு.......................................................................... 16

2.4.1 2017 இல் இயைபு முறைகளுக்கு புதிதாகச் சேர்க்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் …………………………………………………………….…. 18

2.4.2 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ……………………………………………… 18

2.4.3 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டுச் சட்டம் ………………………………………………………………….. 18

2.5 வரி விலக்கு........................................ 19

**3. முதலீட்டு கொள்கை**........................................ 21

3.1 வெளிநாட்டு முதலீடுகள்........................................ 21

3.1.1 ஏற்றுமதி தயாரிப்புகளுக்கான தற்காலிக இறக்குமதி (TIEP) திட்டத்தின் கீழான முதலீடு........................................ 22

3.1.2 செலாவணி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ........................................ 22

3.2 சர்வதேச ஒத்துழைப்பு........................................ 23

3.2.1 சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF)........................................ 23

3.2.2 சார்க் நிதி கூட்டங்கள்........................................ 25

3.3 சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட்குதங்கள்........................................ 26

**4. நிருவாகம் மற்றும் நிதி தொடர்பான செயலாற்றுகை**........................................ 28

4.1 நிருவாகம்........................................ 28

4.2 விசேட கருத்திட்டங்கள்........................................ 34

4.2.1 சேவையிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் திட்டம் ........................................ 34

4.2.2 அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற சிரேட்ட அரச துறை உத்தியோகத்தர்களுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் திட்டம் ........................................ 35

4.3 நிதிப் பிரிவு........................................ 35

4.4 கணக்காய்வு விசாரணைகள்........................................ 36

**5. இணைப்புகள்** ........................................ 37

இணைப்பு I 2076 இல் இயைபு முறைக்கான தேசிய உப பிரிவுகள்........................................ 37

இணைப்பு II 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம் (சுங்க இறக்குமதித் தீர்வை வரி) 39

இணைப்பு III சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235)கீழ் மாற்றங்கள் 40

இணைப்பு IV 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் கீழான வரித் திருத்தங்கள் 41

## அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| அட்டவணை 2.1 | இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி - 2016 / 2017 | 8 |
| அட்டவணை 2.2 | பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி - 2016 / 2017 | 9 |
| அட்டவணை 2.3 | கட்டம் II இல் ஒவ்வொரு உறுப்பு நாடும் கொண்டிருந்த உணர்வுதிறன் பட்டியல் பொருட்கள் மற்றும் கட்டம் III இல் குறைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட விகிதம் | 11 |
| அட்டவணை 2.4 | இலங்கைக்காக தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி - 2016/2017 | 11 |
| அட்டவணை 2.5 | 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் (APTA) கீழ் இலங்கையின் வர்த்தகப் பிரயோகம் | 12 |
| அட்டவணை 2.6 | விரைவு வரித் தாராளமயமாக்கல் | 13 |
| அட்டவணை 2.7 | சாதாரண வரி தாராளமயமாக்கல் | 13 |
| அட்டவணை 2.8 | 2017 இல் இலங்கையுடனான வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் | 14 |
| அட்டவணை 2.9 | 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வை வரிக் கட்டமைப்பு | 17 |
| அட்டவணை 2.10 | 2010 முதல் 2017 வரை தீர்வை வரிக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் | 18 |
| அட்டவணை 2.11 | 2017 ஆம் ஆண்டில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தீர்வை வரி விலக்களிப்பு | 19 |
| அட்டவணை 2.12 | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சாதாரண தீர்வை வரி விலக்களிப்பு | 20 |
| அட்டவணை 3.1 | 2017 இல் அங்கீகாரம் அளிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் | 21 |
| அட்டவணை 3.2 | 2017 இல் மீளப்பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட முதலீடுகள் | 22 |
| அட்டவணை 3.3 | 2017 ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் | 23 |
| அட்டவணை 3.4 | 2017 இல் சமூகமளிக்கப்பட்ட சார்க் அபிவிருத்தி நிதியக் கூட்டங்கள் | 24 |
| அட்டவணை 3.5 | 2017 இல் நடாத்தப்பட்ட சாரக் நிதிக் கூட்டங்கள் | 26 |
| அட்டவணை 4.1 | 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பதவியணி | 28 |
| அட்டவணை 4.2 | 2017 ஆம் ஆண்டில் திணைக்களத்தில் இணைந்துக் கொண்ட அலுவலர்கள் | 29 |
| அட்டவணை 4.3 | 2017 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள். | 29 |
| அட்டவணை 4.4 | 2017 இல் வெளிநாட்டுப் பயிற்சிக் கற்கைநெறி/செயலமர்வுகள் மற்றும் கூட்டங்கள் | 30 |
| அட்டவணை 4.5 | 2017 இல் உள்நாட்டுப் பயிற்சிக் கற்கைநெறி/ கருத்தரங்குகள் | 31 |
| அட்டவணை 4.6 | வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின் பயன்பாடு – 2017 | 35 |
| அட்டவணை 4.7 | அரசாங்க அலுவலர்களின் முற்பண “பீ”கணக்கு – 2017 | 36 |
| அட்டவணை 5.1 | 2017 இல் இயைபு முறைக்கான தேசிய உப பிரிவுகள் | 37 |
| அட்டவணை 5.2 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம் (சுங்க இறக்குமதித் தீர்வை வரி | 39 |
| அட்டவணை 5.3 | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) கீழ் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் | 40 |
| அட்டவணை 5.4 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான வரித் திருத்தங்கள் | 41 |

# 1. அறிமுகம்

## 1.1 நிறுவன அமைப்பு முறை

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களமானது, பிரதானமாக இலங்கையின் பொருளாதாரத்தினதும் மக்களினதும் நன்மைக்காக வெளிநாட்டு வர்த்தகம், தீர்வை வரி மற்றும் முதலீடுகள் தொடர்பான நிலைத்து நிற்கும் கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. நாட்டின் சர்வதேச பொருளாதார ஒருங்கிணைப்பின் மேம்பாடு மற்றும் வசதியளித்தல் ஆகியவற்றின் பரந்த குறிக்கோள்களுடன், நிதி அமைச்சின் பொதுத் திறைசேரியின் கீழ் 2006 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் இந்தத் திணைக்களம் தாபிக்கப்பட்டு வியாபாரம், தீர்வை வரி மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டது. திணைக்களத்தின் தொழிற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக அதற்கு மீண்டும் 2012 ஆம் ஆண்டில் “வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்” என மறுபெயரிடப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் சிறந்த சேவையொன்றை வழங்கும் நோக்கில் திணைக்களத்தின் உபாயரீதியான கொள்கை மீளமைக்கப்பட்டதுடன், அதன் நோக்கு, செயற்பணி, இலக்குகள், தொழிற்பாடுகள் மற்றும் நிறுவன கட்டமைப்பு என்பன மீள்வகுத்தமைக்கப்பட்டன. இத்திணைக்களமானது, அதன் முக்கிய பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது.

i. வர்த்தகக் கொள்கைப் பிரிவு
ii. முதலீட்டுக் கொள்கைப் பிரிவு
iii. நிருவாக, நிதி மற்றும் விசேட திட்டங்கள் பிரிவு

## 1.2 நோக்கு

நாட்டின் முழுமையான அபிவிருத்தியின் பொருட்டு வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகியவற்றில் செயற்பாட்டுக் கொள்கைகளைத் தாபிப்பதனை உறுதிப்படுத்துதல்.

## 1.3 செயற்பணி

முழுமையான அபிவிருத்தியின் பொருட்டு சர்வதேச பொருளாதார ஒருமைப்பாட்டுக்கு வசதியளிப்பதற்கு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சூழலொன்றை உருவாக்குதல்.

## 1.4 இலக்கு

- பிராந்தியத்தில் இலங்கையை விருப்பத்திற்குரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான இடமாக மேம்படுத்துதல்.
- வியாபாரத்தை இலகுபடுத்தும் சுட்டியை 50 இற்குக் கீழான நிலையில் வைத்துக் கொள்வதற்கு முயற்சித்தல்.
- கைத்தொழில் நட்பு தீர்வை வரி நிருவாகமொன்றைப் பெற்றுக் கொள்ளுதல்.
- 2020 ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர் 25 பில்லியன் வரை வர்த்தகப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
- வர்த்தகத்திற்காக போட்டிக்குரிய சாதகமான வர்த்தக உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- அரசாங்கத்தின் சமூக மற்றும் பொருளாதார இலக்கினை அடையும் பொருட்டு வரிச்சலுகைகளை அமுல்படுத்துதல்.

## 1.5 குறிக்கோள்கள்

- முதலீட்டை அதைரியப்படுத்தும் கட்டுப்பாடுகளை நீக்குதல்.
- ஏற்றுமதித் தயாரிப்புக்கான தற்காலிக இறக்குமதி திட்டத்தினையும் சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட்குதக் கொள்கையையும் வலுவூட்டுதல்.
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கான கொள்கையொன்றைத் தயாரிப்பதற்காக தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல்.
- சிறிய தொழில்முயற்சியாளர்களை நடுத்தர தொழில்முயற்சியாளர்களாகவும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை பாரிய அளவிலான தொழில்முயற்சியாளர்களாகவும் மேம்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- 2018 ஆம் ஆண்டளவில் சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்.
- வாடிக்கையாளர் நட்பு ரீதியிலான தரவுத் தளத்தினூடாக தேவையான தகவல்களை வழங்குவதன் மூலம் தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுதல்.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான சட்ட வழிகாட்டலைத் தயாரித்தல்.
- அரசாங்கத் துறை உத்தியோகத்தர்களுக்கு சலுகைரீதியான வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவதனை முறைப்படுத்துதல்.
- தீர்வை வரி சார்ந்த பிரச்சினைகளைக் 10% சதவீதத்திற்கு குறைவான அளவுக்கு குறைத்தல்.
- நாட்டின் வர்த்தகப் பொருளாதாரத்தின் சமச்சீரற்ற தன்மைக்குள் எதிரிடை நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேம்படுத்துதல்.
- உலகலாவிய ரீதியில் சாதகமான வர்த்தகத்திற்கான / கைத்தொழிலுக்கான வாய்ப்பினை வழங்கக்கூடிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேம்படுத்துதல்.

## 1.6 நிறுவனக் கட்டமைப்பு



## 1.7 தொழிற்பாடுகள்

### 1.7.1 வர்த்தகக் கொள்கைப் பிரிவு

வர்த்தகக் கொள்கைப் பிரிவானது, வர்த்தகம், கைத்தொழில் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான வர்த்தக மற்றும் தீர்வை வரிக் கொள்கைகளை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மீளாய்வு செய்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருக்கின்ற அதேவேளை, இலங்கை சுங்கத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் முறைப்பாடுகள் உள்ளடங்களாக அதன் நிருவாகத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருக்கின்றது. இப்பிரிவின் முக்கியமான செயற்பாடுகளை பின்வருமாறு குறிப்பிட முடியும்.

#### 1.7.1.1 வர்த்தகக் கொள்கை

i. தீர்வை வரி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அதற்கான மாற்றீடுகளை பகுப்பாய்வு செய்தல்

ii. விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தினை அமுல்படுத்துதல்.

iii. தீர்வை வரி கொள்கையை மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

iv. மோட்டார் வண்டி இறக்குமதிக் கொள்கையை கருத்திட்ட அடிப்படையில் அபிவிருத்தி செய்தல்

v. வர்த்தக/வியாபாரப் பேரவைகளை ஒழுங்குசெய்தல்

vi. பங்குதாரர்களுக்கிடையே வர்த்தகக் கொள்கை தொடர்பான கலந்துறையாடல்களை நடாத்துதல்.

vii. வர்த்தகம் அல்லது தீர்வை வரி தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு.

viii. பங்குதாரர்களினால் முன்வைக்கப்படும் வர்த்தகம் அல்லது தீர்வை வரிக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல்.

ix. அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் வர்த்தக அல்லது வரிக் கொள்கைப் பத்திரத்திரங்களை தயாரித்தல்.

x. நிதி அமைச்சின் முகவர் அமைப்பாக சர்வதேச வர்த்தகத்தில் பங்கேற்றல்

xi. வர்த்தகம் அல்லது தீர்வை வரி கொள்கைகள் தொடர்பான நீதி மன்ற வழக்குகளுக்கான பதில்களைத் தொகுத்தல்.

xii. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் /அவதானிப்புகள் / கருத்துரைகள் என்பவற்றைத் தயாரித்தல்.

#### 1.7.1.2 தீர்வை வரிக் கொள்கை

i. 19(அ) வரி விலக்களிப்பைக் ஒருங்கிணைத்தல்.

ii. 19(அ) வரி விலக்களிப்புக்கான தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல்.

iii. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை வெளியிடுவதற்கு வசதியளித்தல்.

iv. அரசிறைப் பாதுகாப்புக் கட்டளையை வெளியிடுதல்.

v. தீர்வை வரி முரண்பாடுகள் தொடர்பான குறைப்பாடுகளைத் தீர்த்தல்

vi. இ.மு குறியீட்டு (HS Cord) தேசிய உப பிரிவுகளை முகாமை செய்தல்.

vii. விலைமதிப்பு உள்ளிட்ட சுங்க வழக்குகள் மீதான மேன்முறையீடுகளை மீளாய்வு செய்தல்.

viii. சுங்க நிருவாகம் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.

ix. இ.மு. குறியீடுகளுக்கு (HS Cord) இணங்குதலும் இடம்மாற்றி வைத்தலும்.

x. ஏற்றுமதி தயாரிப்புகளுக்கான தற்காலிக இறக்குமதி (TIEP) திட்டத்தின் கொள்கை ரீதியிலான கூட்டிணைப்பு.

xi. சுங்க வரி செலுத்தாப் பொருட் குதங்களின் வசதிகளுக்கான கொள்கை ரீதியிலான கூட்டிணைப்பு.

xii. வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல்.

xiii. வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்.

xiv. தீர்வை வரி கொள்கை மீதான பாராளுமன்ற நடவடிக்கைகள்.

### 1.7.1.3 சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள்

i. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் அரசிறைக் கொள்கை அமுலாக்கல்களை பகுப்பாய்வு செய்தல்.

ii. பொருளாதார முகாமைத்துவம் மீதான ஒருங்கிணைப்புக் குழுவுடனான வர்த்தகம் அல்லது தீர்வை வரி சம்பந்தமான நடவடிக்கைகளின் கூட்டிணைப்பு.

iii. இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு இணங்க வியாபாரக் கொள்கையை மீளாய்வு செய்தலும் இற்றைப்படுத்துதலும்.

iv. பின்வரும் உடன்படிக்கைகளின் தீர்வை வரிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்:

- இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)
- பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)
- தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- சேவைகளில் வர்த்தகம் தொடர்பான சார்க் உடன்படிக்கை (SATIS)
- ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)
- இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLSFTA)
- வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு உடன்படிக்கை (BIMSTEC FTA)
- உத்தேச சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSFTA) மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைப்பு உடன்படிக்கை (ETCA).
- கூட்டு வர்த்தகக் குழுக்கள் (கென்யா, வியட்நாம், ஜப்பான், ரஷ்யா போன்றன).

## 1.7.2 முதலீட்டுக் கொள்கைப் பிரிவு

உரிய அரச நிறுவனங்களுடன் இணைந்து முதலீடு தொடர்பான கொள்கை விடயங்களுக்கு முதலீட்டுக் கொள்கைப் பிரிவு பொறுப்பாக இருக்கின்றது. இந்தப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு.

i. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடு தொடர்பான தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல்.

ii. வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான சட்ட விவகாரங்களில் கலந்து கொள்ளுதல்.

iii. நிதி அமைச்சின் சார்பில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளைக் பரிசீலணை செய்தல்.

iv. இலங்கையின் நிதி புலனாய்வு பிரிவினால் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கான விவகாரங்களில் ஈடுபடுதல்.

v. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பாக சகல அங்கீகாரங்களையும் வழங்குதல்.

vi. நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்,பண மோசடி தடுப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத நிதி மறைப்புச் சட்டம் தொடர்பான மாநாடு தொடர்பாக சகல அங்கீகாரங்களையும் வழங்குதல்.

vii. சுங்க வரி செலுத்தாப் பொருட்குதங்கள் மீதான அங்கீகாரம்.

viii. சுங்க வரி செலுத்தாப் பொருட்குதங்கள் தொடர்பான தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல்.

ix. தொடர்புடைய பங்குதாரர்களுடன் சுங்க வரி செலுத்தாப் பொருட்குதங்கள் தொடர்பான கொள்கைச்சட்டகம் ஒன்றை விருத்தி செய்தல்.

x. முதலீட்டுச் சபைச் சட்டம் தொடர்பான விடயங்களில் கலந்து கொள்ளல்.

xi. தனியார் அரசாங்கப் பங்குடமை (PPP) தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல்.

xii. சார்க் மற்றும் சார்க் அபிவிருத்தி நிதியம் தொடர்பான சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

xiii. சர்வதேச நாணய நிதியம் மற்றும் பொதுநலவாய செயலகம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

xiv. தொடர்புடைய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல்.

xv. முதலீடு தொடர்பான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.

xvi. அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/ அவதானிப்புகள் / கருத்துரைகள் என்பவற்றைத் தயாரித்தல்.

### 1.7.3 நிருவாக மற்றும் நிதிப் பிரிவு

நிருவாக மற்றும் நிதிப் பிரிவானது மனித வளம், பௌதிக மற்றும் நிதி வளங்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. மனித வள முகாமைத்துவம் ஆட்சேர்ப்பு, அபிவிருத்தி மற்றும் திணைக்களத்திற்குள்ளேயும் வெளியேயுமான அலுவலர்களின் இடமாற்றம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளதுடன் பௌதிக மற்றும் நிதி வளங்கள் முகாமைத்துவமானது கையகப்படுத்தல், பௌதிக மற்றும் நிதி வளங்கள் தொடர்பாகன பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் ஆகிய நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

# 2. வர்த்தக கொள்கை

வர்த்தக கொள்கையானது இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளின் எல்லைக்குள் உள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு வர்த்தகம் என்பவற்றுடன் சர்வதேச கடப்பாடுகள் ஆகியவற்றின் வெளிப்பாட்டு முறைமைகளுக்கு ஏற்ப அத்தகைய கொள்கை நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களை வெளியிடுதல் மற்றும் தீர்வை வரிக் கொள்கை உள்ளடங்கலாக கொள்கைகளை வகுத்தல் மற்றும் கொள்கை பகுப்பாய்வினை உள்ளடக்கியுள்ளது.

## 2.1 வர்த்தக உடன்படிக்கைகள்

உலக வர்த்தக அமைப்பு என்பது, ஐக்கிய அமேரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் யப்பான் ஆகிய நாடுகள் உட்பட சில மிக முக்கிய வர்த்தக பங்காளர்களுடன் இலங்கை தனது வர்த்தக உறவினை கொண்டிருப்பதற்கான பிரதான நிறுவன கட்டமைப்பாகும்.

இலங்கை உலக வர்த்தக அமைப்பு நிறுவப்பட்ட 1995 ஆம் ஆண்டில் அதன் நிறுவன உறுப்பினரானதுடன், அதற்கு முன்னர் இலங்கை தீர்வை மற்றும் வியாபாரம் மீதான பொது உடன்பபடிக்கையின (GATT) 23 நிறுவன உறுப்பினர்களில் ஒன்றாக காணப்பட்டது. தீர்வை மற்றும் வியாபாரம் மீதான பொது உடன்படிக்கை (GATT) உதவியின் கீழ் உருகுவே சுற்று வர்த்தக பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவை உலக வர்த்தக அமைப்பு ஸ்தாபிக்கப்படுவதற்கு வழிவகுத்தன.

பலதரப்பு வர்த்தக முறைமையானது தற்போது வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் பொருட்களின் வர்த்தகம், வங்கி நடவடிக்கைகள், தொடர்பாடல், கைத்தொழில் தர நிர்ணயம் மற்றும் தயாரிப்புகளுக்கான பாதுகாப்பு, உணவு சுகாதார விதிமுறைகள், சுங்க மதிப்பீடு, புலமைச் சொத்து மற்றும் பிற துறைகளை நிறுவகிக்கும் உலக வர்த்தக அமைப்பு உடன்படிக்கைகளினால் நிறுவகிக்கப்படுகின்றது. உலக வர்த்தக அமைப்பு வரைச்சட்டகத்தின் கீழான வர்த்தகம் உறுப்பினர்களுக்கிடையிலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கிடையிலும் பாகுபாடற்ற கொள்கையினால் நிறுவகிக்கப்படுகின்றது. இருப்பினும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் பரஸ்பர முன்னுரிமை அல்லாத வர்த்தக உடன்படிக்கைகள் போன்றவை இவ்விதிமுறைக்கு விதிவிலக்காக அமைகின்றது.

பிராந்திய, இருதரப்பு, பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்மிக்க பேச்சுவார்த்தைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாக சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தும் செயன்முறையில் இந்தத் திணைக்களம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளது. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பிராந்திய, இருதரப்பு, பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் பின்வருமாறு;

- **<u>உறுதிசெய்யப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகள்</u>**
  - இந்தியா- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை - (ISFTA)
  - பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை - (PSFTA)
  - தெற்காசிய சுதந்திர வர்த்தகப் உடன்படிக்கை - (SAFTA)
  - ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை - (APTA)
- **பேச்சுவார்த்தை மட்டத்தில் உள்ள வர்த்தக உடன்படிக்கைகள்**
  - வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு உடன்படிக்கை - (BIMSTEC)
  - இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை - (SLSFTA)
  - பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை - (ETCA)
  - சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை - (CSLFTA)

➢ **முன்மொழியப்பட்ட மட்டத்திலுள்ள வர்த்தக உடன்படிக்கைகள்**

- இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை
- வங்காளதேசம் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை
- மலேசியா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை
- வியட்னாம் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

இலங்கைக்கான வர்த்தக உடன்படிக்கைகளின் பிரதான நோக்கம், உயர்வான தலா வருமானத்தை அடைதல், சுற்றுலாத் துறைக்கான சுவர்க்கபுரியாக இலங்கையை மாற்றுதல், போட்டிக்குரிய வர்த்தகச் சூழலொன்றில் சாத்தியமான கைத்தொழில்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்கின்ற அதேவேளையில் வர்த்தகத்திற்கும் முதலீட்டுக்குமான கேந்திர நிலையமாக இலங்கையை ஊக்குவித்தல் என்பனவாகும். விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் எதிர்பார்க்கப்படும் ஊழியர் பற்றாக்குறையான இந்தச் சூழ்நிலையில் சேவைகளின் வர்த்தகம் ஆரம்பத்திலேயே தீர்வு காணப்பட வேண்டிய மிகவும் முக்கியமான பகுதியாகக் காணப்படுகின்றது. அதன் பிரகாரம், முழுமையான பொருளாதார ஒத்துழைப்புக்கான வேலைச் சட்டகங்களை வகுப்பதினூடாக சேவைகளின் வர்த்தகத்திற்காக பொருத்தமான முதலீடுகளைக் கவர்வதற்கும் சாதகமான சூழலை உருவாக்குவதற்கும் உயர்ந்த அளவிலான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.1 வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான முன்னேற்றம்

வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் தீர்வை வரித் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வர்த்தகத் திணைக்களத்துடன் கலந்துரையாடி வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தினால் பொருத்தமான பின்பற்றல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், தீர்வை வரி தாராளமயமாக்கல் திட்டம் உள்ளடங்கலாக வர்த்தக உடன்படிக்கைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைகள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன;

### 2.1.1.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)

1998 டிசம்பர் மாதம் 28 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டதும் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டதுமான இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, இவ்விரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தத்தினால் முதலீடு செய்யப்பட்டுள்ள இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டின் அதிகரிப்பின் மூலம் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் பொருளாார இணைப்புகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் உடன்படிக்கை மூலம் இருநாடுகளும் இலவச வரி அடிப்படையில் அல்லது வரிச் சலுகை அடிப்படையில் தத்தமது ஏற்றுமதியினை மேற்கொள்வதற்கான சந்தை வசதியினையும் பொருட்களின் வர்த்தகத்தையும் மட்டுமே கொண்டுள்ளது.

பாரிய ஏற்றுமதிப் பொருட்களான மரக்கறி எண்ணெய், முதன்மை செம்பு, மாஜரின், பளிங்கு மற்றும் மிளகு போன்ற பொருட்களில் குறைப்பு இருப்பினும் பல்வேறு வகைப்பட்ட ஏனைய தயாரிப்புகளுக்கு இந்தியாவிற்கான சந்தை வசதி காணப்பட்டது. அவற்றில் காப்பிடப்பட்ட கம்பிகள் மற்றும் கேபிள்கள், கோழி தீன், காற்றடைக்கப்பட்ட டயர்கள், மட்பாண்டங்கள், ஆடைகள், மரத்தளபாடங்கள், குளிரூட்டிகள், அளவை மற்றும் பரிசோதனை இயந்திரங்கள், கண்ணாடி பாட்டில்கள், பதப்படுத்தப்பட்ட இறைச்சி தயாரிப்புகள், நடுத்தர அடர்த்தி பைபர் பலகைகள், இறப்பர் கையுறைகள், வெப்ப காகிதங்கள், தள ஓடுகள்,கற்கள், பளிங்கு, வெப்பமேற்றிகள் மற்றும் இயந்திர உதிரிப் பாகங்கள், இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள், பெனல் போட்ஸ் மற்றும் இணைப்புகள், சாக்கு மற்றும் பைகள் உள்ளடக்கப்படும்.

**அட்டவணை 2.1 இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி 2016/ 2017**

| 2016 | | 2017 | |
|---|---|---|---|
| இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 27,216 | 57,576 | 43,273 | 72,108 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம்-2016/2017*

இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான விடயங்கள் தற்போது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கான (ETCA) கூட்டங்களில் கலந்துரையாடப்படுகின்றன.

### 2.1.1.2 பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)

2005 யூன் மாதம் 12 ஆந் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் கணிசமானளவு முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாகும்.

பாகிஸ்தானுக்கான இலங்கையின் முக்கிய ஏற்றுமதியில் மிளகு, பீடி இலை, வெற்றிலை, தேங்காய் சிரட்டை துண்டுகள், இயற்கை இறப்பர், புதிய அல்லது காய்ந்த தேங்காய் மற்றும் முந்திரி, மரப்பலகை மற்றும் மரப்பலகையிலான பொருட்கள், மரக்கறிகள் மற்றும் தேயிலை போன்றவை உள்ளடங்குகின்றன. இவ் உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் புதிய அன்னாசி, விளையாட்டுப் பொருட்கள், விதையுடனான புளி, சமையல் எண்ணெய், பீங்கான் வகையிலான மேசை மற்றும் சமையலறை பொருட்கள், பீங்கான் ஓடுகள், தளபாடங்கள், மின் சுவிட்சுகள் மற்றும் சொக்கட்ஸ், மூலிகை அழகு சாதனப் பொருட்கள் மற்றும் பிளாஸ்திக்கிலான் பொருட்கள், நிற பூச்சசுகள், கண்ணாடி ஓவியங்கள், தோல் பொருட்கள், உறைந்த மீன், இறால், கடல் நண்டுகள், நண்டுகள், வெட்டு மலர்கள் மற்றும் பசுமைப் பொருட்கள், இரத்தினக்கற்கள் மற்றும் அணிகலன்கள் மற்றும் அழங்கார மீன் உள்ளடங்களாக குறிப்பிட்டத்தக்க புதிய தயாரிப்புகளும் பாகிஸ்தான் சந்தையில் ஊடுருவியுளளன.

இரு நாடுகளும் தீர்வை வரி தாராளமயமாக்கல் திட்டத்தின் கீழ் அதன் வரி அமுலாக்கத்தை நிறைவு செய்துள்ளதுடன், தற்போது இருநாடுகளுக்குமிடையில் 4500 இற்கும் அதிகமான பொருட்களுக்கு இலவச வரியுடனான சந்தை அணுகல் உள்ளது. பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இரு நாடுகளுக்குமிடையிலான இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.2 பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி 2016 / 2017**

| 2016 | | 2017 | |
|---|---|---|---|
| **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 3,069 | 9,123 | 2,325 | 9,320 |

***மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2016/2017***

பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை முதலீடு, சேவை மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையானதொரு உடன்படிக்கையாக தரமுயரத்துவதற்கான பேச்சுவார்த்தையொன்று உள்ளது.

2017 ஆம் ஆண்டில் வெற்றிலை சம்பந்தமாக ஏற்பட்டிருந்த பிரச்சினையை கலந்துரையாடுவதற்காக வர்த்தகத் திணைக்களத்துடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 2.1.1.3 தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)

தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (SAFTA), சார்க் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் குழுவினால் பாகிஸ்தான், இஸ்லாமாபாத் நகரில் 2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது. தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான இறுதி கட்ட முக்கிய ஆரம்ப பணிகள் அதன் உறுப்பு நாடுகளிலுள்ள நிபுணர்ளை உள்ளடக்கிய

நிபுணர்கள் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது, தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு (SAPTA) உருவாக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முன்னுரிமை வர்த்தகத்தை மேம்படுத்துவதனூடாக, பல்துறை பொருளாதார ஒருங்கிணைப்பு திட்டத்தை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற 15 ஆவது சார்க் மாநாட்டில் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் அமைச்சு மன்றத்தினால் (SMC) உணர்திறன் பட்டியல் திருத்தியமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இது சம்பந்தமாக, உணர்திறன் பட்டியலின் அளவினை குறைப்பதற்கான வேலையை ஆரம்பிப்பதற்கு ஒரு தனிப்பட்ட வேலைக்குழுவினை அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டதுடன் அனுமதிக்கப்பட்டது. இவ்வேலைக் குழுவின் முதலாவது கூட்டம் 2010 பெப்ரவரி 10 ஆந் திகதி இடம்பெற்றதுடன் அதில் உணர்திறன் பட்டியல்களிலுள்ள தீர்வை வரிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான முன்மொழிவுகளின் விதிமுறைகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. உறுப்பு நாடுகள் தமது கோரிக்கை பட்டியல்களை இருதரப்பில் தயாரித்து செயலகத்துக்கு அறிவித்தல் வேண்டுமென கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டது. அத்தகைய கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து உறுப்பு நாடுகள் சார்க் செயலகத்தினூடாக சகல சார்க் உறுப்பு நாடுகளுக்குமான தமது ஆரம்ப சலுகைப் பட்டியல்களை தயார்படுத்தும். வேலைக் குழுவின் அடுத்த கூட்டத்தில் கோரிக்கை மற்றும் சலுகைப் பட்டியல்கள் தொடர்பான மேலதிக விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும்.

சேவைகள் மீதான வர்த்தகம் தொடர்பான சார்க் உடன்படிக்கையின் (SATIS) ஐந்தாவது நிபுணர்கள் குழுக் கூட்டம் 2010 ஆம் ஆண்டு நேபால், காத்மண்டு நகரிலுள்ள சார்க் செயலகத்தில் 2010 பெப்ரவரி மாதம் இடப்பெற்றது. அக் கூட்டத்தில் நான்காவது நிபுணர்கள் குழு கூட்டத்தில் திருத்தப்பட்டவாறான சேவைகள் மீதான வர்த்தகம் தொடர்பான சார்க் உடன்படிக்கையின் (SATIS) வரைபினை நிறைவு செய்து அடுத்து வரும் சார்க் மாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்களினால் அதனை கைச்சாத்திடுவது பற்றி மீண்டும் கலந்தாலோசிக்கப்பட்டது. பொறுப்புகள் பற்றிய குறிப்பிட்ட காலஅட்டவணைகள் மீதான கலந்துரையாடல் அவ் உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின் மேற்கொள்வதற்கும் அக்கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, சேவைகள் மீதான வர்த்தகம் தொடர்பான சார்க் உடன்படிக்கை (SATIS) 2010 ஏப்ரில் 29 ஆந் திகதி பூட்டானில் இடம் பெற்ற 16 ஆவது சார்க் மாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்களினால் கைச்சாத்திடப்பட்டதுடன், இலங்கை இவ் ஒப்பந்தத்தை 2010 ஜுன் 02 ஆந் திகதி ஏற்றுக்கொண்டது.

தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) இன் கீழான தீர்வை வரி தாராளமயமாக்கல் திட்டத்தின் (TLP) கட்டம் I, 2015 இல் நிறைவு செய்யப்பட்டதுடன், கட்டம் II 2018 டிசம்பர் இறுதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டியதாக உள்ளது. கட்டம் II இல் தற்போதைய எதிர்மறைப் பட்டியலிலுள்ள 208 விடயங்களுக்கான தீர்வை வரியை தாராளமயமாக்குவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்திருந்தது.

2017 ஆம் ஆண்டில் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) இன் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் வெள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, இலங்கைச் சுங்கம் மற்றும் வர்த்தகத் திணைக்களத்துடன் இடம்பெற்றன.

உணர்திறன் பட்டியலிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை மற்றும் உறுப்பு நாடுகளினால் கட்டம் III இல் குறைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட விகிதம் என்பன கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.3 கட்டம் II இல் ஒவ்வொரு உறுப்பு நாடும் கொண்டிருந்த உணர்திறன் பட்டியலின் பொருட்கள் மற்றும் கட்டம் III இல் குறைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட விகிதம்**

| உறுப்பு நாடு | மூல உணர்திறன் பட்டியலிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை | திருத்தப்பட்ட உணர்திறன் பட்டியலிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை (கட்டம் – II) | கட்டம் IIIஇன் கீழ் குறைப்பதற்கு இணக்கம் தெரிவித்த விகிதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆப்கானிஸ்தான் | 1072 | 850 | 20% |
| வங்காளதேசம் | 1233 (LDCs)<br>1241 (NLDCs) | 987 (LDCs)<br>993 (NLDCs) | 20% |
| பூட்டான் | 150 | 156 | ஏற்புடையதல்ல |
| இந்தியா | 480 (LDCs)<br>868 (NLDCs) | 25 (LDCs)<br>614 (NLDCs) | 20% கான NLDCs மட்டும் |
| மாலைத்தீவு | 681 | 154 | ஏற்புடையதல்ல |
| நேபால் | 1257 (LDCs)<br>1295 (NLDCs) | 998 (LDCs)<br>1036 (NLDCs) | 20% |
| பாகிஸ்தான் | 1169 | 936 | 20% |
| இலங்கை | 1042 | 837 (LDCs)<br>963 (NLDCs) | 10% |

மூலம்: தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செயலகம்

*LDCs – மிகக் குறைவான வளர்ச்சி அடைந்த நாடுகள் *NLDCs - மிகக் குறைவான வளர்ச்சி அடையாத நாடுகள்

2016 மற்றும் 2017 இல் தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழுள்ள வர்த்தக தரவுகள் அடங்கிய அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4 இலங்கைக்காக தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான மொத்த இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி- 2016 / 2017**

| 2016 | | 2017 | |
|---|---|---|---|
| இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 908 | 1,270 | 1,295 | 8,879 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2016/2017*

## 2.1.1.4 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

1975 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது முன்னர் பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்டதுடன், வங்காளதேசம், சீனா, இந்தியா, லாவோஸ் கொரியா குடியரசு மற்றும் இலங்கை ஆகிய 06 பங்கேற்பு நாடுகளை உள்ளடக்கியுள்ள ஆசியாவின் மிகப் பழமையான பல்துறை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களில் ஒன்றாக காணப்படுகின்றது.

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை என்பது இலங்கைக்கு சாதகமான விளைவுகளை வழங்கக் கூடிய ஒரு பல்துறை ஒப்பந்தமாகும். இது குறிப்பாக சீனா மற்றும் கொரியா குடியரசுடனான வர்த்தகத்திற்கு வசதியளிக்கும் ஒரே ஒரு வர்த்தக உடன்படிக்கையாக காணப்படுவதனால் இலங்கைக்கு முக்கியமானதாக அமைகின்றது.

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளாக நார் பொருட்கள், தேயிலை, இயற்கை இறப்பர், ஆடை, மீன் தயாரிப்புகள், செயற்படுத்தப்பட்ட கார்பன், மரத் தளபாடங்கள், வெள்ளி அணிகலன்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் என்பன அமைகின்றது.

2007 அக்டோபார் 26 ஆந் திகதி இந்தியா, கோவாவில் இடம் பெற்ற ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் அமைச்சு மன்றத்தின் இரண்டாம் அமர்வின் நான்காவது சுற்று வர்த்தக பேச்சுவார்தையின் முடிவில் மேலும் சலுகைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டன. பொருட்களின் அளவை விரிவுபடுத்தல் மற்றும் தீர்வை குறைப்புகளை அதிகரித்தல் என்பவற்றுக்காகவும் தீர்வையற்ற நடவடிக்கைகள், வர்த்தக வசதியளிப்பு, சேவைகள் மற்றும் முதலீடுகள் போன்ற ஏனைய விடயங்களுக்கான பேச்சுவார்த்தைகளை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றல் என்பவற்றையும் கருத்திற் கொண்டு அமைச்சர்களால் இப்புதிய சுற்று ஆரம்பிக்கப்பட்டது. மூன்றாவது அமைச்சு மன்றம் 2009 டிசம்பர் 15 ஆந் திகதி கொரியா குடியரசின் சியோல் நகரில் இடம்பெற்றது. இதற்கு மேலதிகமாக, வர்த்தக வசதியளிப்பு மற்றும் மேம்படுத்தல், முதலீடு மீதான தாராளமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இரண்டு வரைச்சட்டக உடன்படிக்கைகள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டன.

2017 இல் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் நிலையியற் குழுவின் 51 வது அமர்வு இலங்கையில் செப்டெம்பர் 28-29 ஆந் திகதிகளில் இடம்பெற்றது. அத்துடன் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 4 ஆம் சுற்று வரிச் சலுகைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்துடன் இடம்பெற்றன.

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் உறுப்பு நாடுகளினால் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் சுருக்கம் கீழே அட்டவணை 2.5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் வர்த்தகப் பிரயோகம்.**

| 2016 | | 2017 | |
|---|---|---|---|
| **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** | **இறக்குமதிகள்** | **ஏற்றுமதிகள்** |
| பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) | பெறுமதி (ரூ.மில்.) |
| 2,328 | 19,189 | 3,720 | 24,431 |

***மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம், 2016/2017***

### 2.1.1.5 வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

1997 ஆம் ஆண்டு ஜுன் 06 ஆந் திகதி பாங்கொக் நகரில் ஒரு புதிய துணை பல்துறைக் குழு அமைக்கப்பட்டு BIST-EC (Bangladesh, India, Sri Lanka and Thailand Economic Coperation) என பெயரிடப்பட்டது. 1997 டிசம்பர் 22 ஆந் திகதி பாங்கொக் நகரில் நடைபெற்ற விசேட அமைச்சர்கள் மன்றத்தில் மியன்மார் பார்வையாளராக கலந்துக் கொண்டதுடன் அமைப்பின் முழு உறுப்பினராக இணைந்து கொண்டது. அதனைத் தொடர்ந்து அமைப்பின் பெயர் BIMST-EC என மாற்றியமைக்கப்பட்டது. 1998 டிசம்பர் மாதம் டாக்காவில் நடைபெற்ற இரண்டாவது அமைச்சர்கள் கூட்டத்தின் மூலம் நேபால் பார்வையாளர் அந்தஸ்த்தைப் பெற்றது. அதற்குப் பின்னர் 2004 பெப்ரவரியில் நேபால் மற்றும் பூட்டான் நாடுகளுக்கு முழு உறுப்புரிமை வழங்கப்பட்டது.

2004 ஜுலை 31 ஆந் திகதி நடைபெற்ற முதலாவது BIMSTEC மாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்களால் இவ் அமைப்பானது BIMSTEC (வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு) என அழைக்கப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு தொடர்பான சுதந்திர வர்த்தக (BIMSTEC) உடன்படிக்கையின் முக்கிய நோக்கம் வங்காள விரிகுடாவின் கரையோரத்தை அண்டிய தென் ஆசிய மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிப்பதாகும். அதில் வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை, மனிதவள அபிவிருத்தி, விவசாயம்,

மீன்பிடித்துறை, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல், புடவை மற்றும் தோல் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

BIMSTEC அமைப்பின் வர்த்தக பேச்சுவார்தைக் குழுவின் இருபதாவது கூட்டம் தாய்லாந்து இராச்சியத்தல் 2015 செப்டெம்பர் 07 – 09 வரையான காலத்தில் நடைபெற்றதுடன் அதில் 2011 பெப்ரவரி 21-23 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்ற பத்தொன்பதாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்துவதற்கான அவசியம் விசேடமாக சுட்டிக்காட்டப்பட்டது. ஏற்புடைய MFN தீர்வைவரி விகிதங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் குறைப்பதற்கான கால அவகாசங்களை திருத்தியமைப்பதனை நோக்கமாகக் கொண்ட திருத்தப்பட்ட சட்டவரைவு உடன்படிக்கைக்கான வரைவு நெறிமுறைகளை பணிக்குழுக்கள் மீளாய்வு செய்தன. அதன்படி பொருட்களுக்கான வர்த்தகம் மீதான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் திகதியை கீழே இணக்கம் தெரிவிக்கப்பட்ட தீர்வை வரி தாராளமயமாக்கல் அட்டவனையில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்துவதற்கு குழு இணக்கம் தெரிவித்தது.

அட்டவணை 2.6 மற்றும் 2.7 வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவுக்கான பலதரப்பு முன்னெடுப்பு (BIMSTEC) சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தீர்வை வரி தாராளமயமாக்கலைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.6 விரைவு வரி தாராளமயமாக்கல்**

| இல. | நாடுகள் | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்காக | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்காக |
|---|---|---|---|
| 1 | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து | 2016.07.01 முதல் 2019.06.30 வரை | 2016.07.01 முதல் 2017.06.30 வரை |
| 2 | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் | 2012.07.01 முதல் 2021.06.30 வரை | 2012.07.01 முதல் 2017.06.30 வரை |

*மூலம் BIMSTEC செயலகம்*

**அட்டவணை 2.7 சாதாரண வரி தாராளமயமாக்கல்**

| இல. | நாடுகள் | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்காக | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்காக |
|---|---|---|---|
| 1 | இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து | 2017.07.01 முதல் 2022.06.30 வரை | 2017.07.01 முதல் 2020.06.30 வரை |
| 2 | வங்காளதேசம், பூட்டான், மியன்மார் மற்றும் நேபாளம் | 2017.07.01 முதல் 2022.06.30 வரை | 2017.07.01 முதல் 2025.06.30 வரை |

*மூலம் BIMSTEC செயலகம்*

2017 ஆம் ஆண்டில், 15 வது BIMSTEC அமைச்சர்கள் கூட்டம் மற்றும் BIMSTEC சிரேஸ்ட அலுவலர்கள் கூட்டத்தின் 18 வது அமர்வு நேபாளத்தில் ஆகஸ்ட் 07-08 வரையான காலப்பகுதியில் இடம்பெற்றன. அதேவேளை, BIMSTEC உடன்படிக்கையின் வரைவு மீதான கலந்துரையாடல்கள் இலங்கை சுங்கம் மற்றும் வர்த்தக திணைக்களத்துடன் இடம்பெற்றன.

### 2.1.1.6 உத்தேச சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

2014 இல் சீனா மற்றும் இலங்கைக்கு இடையேயான கூட்டு செயலாக்க ஆய்வு நிறைவடைந்ததுடன் அதன் பெறுபேறுகள் இரு நாடுகளுக்குமிடையே மேலும் வலுவான இருதரப்பு பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் இரு நாடுகளுக்கிடையேயான நலன்களை உறுதிப்படுத்துவதற்கும் சீனா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை உறுதுணையாக இருக்கும் என்பதைக் காட்டின.

2017 இல் சீனா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் 5ஆம் 6ஆம் சுற்று பேச்சுவார்தைகள் இடம்பெற்றன. இரு தரப்பினரும் பொருட்கள் மீதான வர்த்தகம், சேவைகள் மீதான வர்த்தகம், முதலீடு, பொருளாதாரம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு சுங்க விதிமுறைகள் மற்றும் வர்த்தக வசதியளிப்பு, வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள் (TBT), சுகாதாரம் மற்றும் பைடோ சுகாதா அளவைகள் (SPS) மற்றும் வர்த்தகத் தீர்வு தொடர்பில் எழும் பிரச்சினைகள் மீதான அபிப்பிராயங்களை பறிமாற்றிக் கொண்டன.

### 2.1.1.7 உத்தேச இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

2017 ஆம் ஆண்டின் இறுதியில், சிங்கப்பூருடன் 08 சுற்று சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ளன. அதன்படி சிங்கப்பூர் உடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இயற்கைக்கு பங்கம் விளைவிக்காத பொருட்களின் வர்த்தகம், சேவைகளின் வர்த்தகம், முதலீடு, தொலைதொடர்பு மற்றும் மின்-வணிகம், நிதிச் சேவைகள், அறிவுசார் சொத்து, போட்டி மற்றும் வெளிப்படைத் தன்மை, வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள் (TBT), சுகாதாரம் மற்றும் பைடோ சுகாதா அளவைகள் (SPS), சுங்க வதிமுறைகள் மற்றும் வர்த்தக வசதியளிப்புகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

### 2.1.1.8 உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை

உத்தேச இந்தியா - இலங்கை பொருளாார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கான 07 ஆம் சுற்று பேச்சுவார்த்தை 2017 திசம்பர் மாதம் கொழும்பில் இடம்பெற்றது. பொது ஏற்பாடுகள் மற்றும் பொருட்களின் வர்த்தகம், சேவைகளின் வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான பணிக்குழுக்களின் கூட்டு அமர்வு தொடர்புடைய பொது பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்காக இடம்பெற்றன. அத்துடன், இரு நாடுகளுக்கிடையே சாதகமற்ற வர்த்தக ஒழுங்கமைப்புகள் இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான செயல்பாட்டு நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

## 2.2 2017 இல் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான சர்வதேச வர்த்தகம்

**அட்டவணை 2.8 2017 ஆம் ஆண்டில் இலங்கையுடனான வர்த்தக உடன்படிக்கைகளின் கீழான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள்**

| இல. | வர்த்தக உடன்படிக்கை | இறக்குமதிகளின் சீ.ஐ.எப்.பெறுமதி (ரூ.மி) | ஏற்றுமதிகளின் எப்.ஓ.பி. பெறுமதி (ரூ.மி) |
|---|---|---|---|
| 1 | இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 43,273 | 72,108 |
| 2 | பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(PSFTA) | 2,325 | 9,320 |
| 3 | தென் ஆசிய சுதந்திர வர்த்தக (SAFTA) உடன்படிக்கை | 1,295 | 8,879 |
| 4 | சார்க் (SAARC) முன்னுரிமை வர்த்தக ஒழுங்கமைப்பு உடன்படிக்கை (SAPTA) | 30 | 714 |
| 5 | ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 3,720 | 24,431 |
| **மொத்தம்** | | **50,643** | **115,452** |

*மூலம்: இலங்கைச் சுங்கம் 2017*

## 2.3 வர்த்தக வசதி

இலங்கை அரசாங்கம் நட்பு ரீதியான வணிக சூழலை ஊக்குவிப்பதற்காகவும் தனியார் துறை வளர்ச்சி மற்றும் உலக சந்தையில் அவர்களின் போட்டி ரீதியான ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கான நாட்டின் மூலோபாய நிலைபாட்டை பயன்படுத்துவதற்கும், வர்த்தக ஊக்குவிப்புக்கான எளிமையான நிர்வாக அளவைகளின் பயன்பாட்டின் மூலம் தனியார் துறையினரை கவர்ச்சிகரமான சர்வதேச நேரடி முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கான வர்த்தக கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்கான தேவைப்பாட்டை அடையாளம் கண்டுள்ளது.

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் குறிக்கோள்களான சுங்க நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல், இணக்கப்படுத்துதல் மற்றும் நவீனமயமாக்குதல் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளன. இது பொருட்களின் வெளியேற்றம், விடுவிப்பு மற்றும் வசதிகளை உள்ளடக்குகின்றது. அத்துடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கிடையே பயனுள்ள ஒத்துழைப்பு நடவடிக்கைகளையும் வழங்குகின்றது. வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையானது வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும், உலகளாவிய ரீதியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் தடைகள் மற்றும் தாமதங்ளுக்கான வாய்ப்புக்களை குறைக்க உதவுகின்றது.

வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் பகுதி 1 இல் 12 பிரிவுகளும் 36 அளவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் உடன்படிக்கையில் சுங்க அகற்றல் விதிமுறைகளுடன் தொடர்புடைய பல ஏற்பாடுகள் அடங்கியுள்ள. இந்த உடன்படிக்கையில் அடங்கியுள்ள பிரதான பகுதிகளாக (அ) சுங்க அகற்றல் விதிமுறைகளுடன் தொடர்புடைய சட்டங்களை வெளியிடுவதற்கான நெறிமுறைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிமுறைகள் (இணைய வெளியீடுகள் உள்ளடங்கலாக) (ஆ) உயர் கட்டளைகளுக்கான ஏற்பாடுகள், (இ) அபராதங்களுக்கான அறவீடுகள், கட்டணங்கள் மீதான கட்டுப்பாடு, (ஈ) பொருட்களின் முன்வரவு செயற்பாடுகள் (உ) மின்னியல் கொடுப்பனவு பாவனை, (ஊ) பொருட்களி விரைவு வெளியகற்றலுக்காக உத்தரவாத அனுமதி (எ) ''அங்கீகரிக்கப்பட்ட இயக்குநர்கள்'' திட்டத்தின் பாவனை (ஏ) ஏற்றுமதியை துரிதப்படுத்தல் (ஐ) அழுகக்கூடிய பொருட்களின் விரைவான வெளியேற்றம் (ஒ) பொதுவான சுங்க மதிப்பீடுகளில் ஆவணங்கள் மற்றும் முறைமைகளை குறைத்தல் (ஓ) ஒருமுகச்செயல் திட்ட பாவனையை ஊக்குவித்தல் (க) நடைமுறைகளின் சீரான தன்மை (ங) பொருட்களின் தற்காலிக சேர்க்கை (ச) போக்குவரத்து நடவடிக்கைகளை எளிதாக்குதல் மற்றும் (ஞ) சுங்க ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான ஏற்பாடுகள் என்பன காணப்படுகின்றன.

அரசாங்கம் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியை அடையும் நோக்கத்தில் வர்த்தகத்தை மேம்படுத்தவும் சர்வதேச வர்த்தகத்தில் அதன் பங்குகளை அதிகரிப்பதற்கும் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கைக்கு இணங்க வர்த்தக வசதியளிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. இது தொடர்பில் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் கீழ், உலக வர்த்தக அமைப்பிற்கான இலங்கை கடப்பாட்டிற்கு இணங்க தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழு (NTFC) 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழு இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயம் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. இது பொது துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் 16 உறுப்பினர்களையும் தனியார் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 7 உறுப்பினர்களையும் உள்ளடக்கிய 23 உறுப்பினர்கள் அடங்கிய குழுவாக காணப்படுகின்றது. வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் இலங்கை தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழுவுக்கு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கை மற்றும் இலங்யையின் வேறு எந்த வர்த்தக வசதியளிப்பு முயற்சிகளும் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழுவுக்கு உதவும் வகையில் உலக வங்கி உதவியுடன் தேசிய வர்த்தக வசதியளிப்புக் குழுவுக்காக ஒரு செயலகம் நிறுவப்பட்டுள்ளது. இச்செயலகத்தில் ஐந்து (5) உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் (இரு தேசிய நிபுணர்கள் உலக வங்கி குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2 அலுவலர்கள் இலங்கை சுங்கத் திணைக்களத்திலிருந்தும், 1 அலுவலர் வர்த்தக திணைக்களத்திலிருந்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்).

வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கை அமுலாக்கத்திற்கான விரிவான செயல் திட்ட அறிக்கை தேசிய வர்த்தக வசதியளிப்பு குழு செயலகத்தினால் அனைத்து உரிய ஒழுங்கமைப்பு முகவர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது. இவ் ஆவணத்தில் ஒன்று திரட்டிய செயற்திட்டங்களும் அதே போன்று தேசிய வர்த்தக வசதியளிப்பு குழுவின் அனைத்து அமுலாக்கல் முகவர்களுக்குமான தனிப்பட்ட செயற்திட்டங்களும் அடங்கியுள்ளன. இவ் அறிக்கையின் அளவீடுகள் / செயல்கள் முதன்மை படுத்தப்பட்டு கிரமமாக அமையப்பெற்றிருக்கும். இந்த செயல் திட்ட அறிக்கை (2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான) 5 வருடங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைக்கு உலக வங்கி குழு மற்றும் சர்வதேச வர்த்தக மையம் உதவியளித்துள்ளது.

உடன்படிக்கையானது உலக வர்த்தக அமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் அதன் கடப்பாடுகளை ஏற்பாடுகளுடன் பொருந்தக் கூடிய வகையில் பொருத்தமான **A, B, C** என பெயரிடப்பட்டுள்ள மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி அவற்றை குறித்த காலப்பகுதிக்குள் உலக வர்த்தக அமைப்பிற்கு அறிவிக்கும்படி தெரிவிக்கிறது.

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் இலங்கை அதன் செயற்பாட்டு அட்டவணையை இறுதி செய்து A, B, C பிரிவுகளுடன் உலக வர்த்தக அமைப்பிற்கு ஏற்கனவே கையளித்துள்ளது. வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் கட்டம் II அபிவிருத்தியடைகின்ற மற்றும் குறைந்த மட்ட அபிவிருத்தி நாடுகள் உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஏற்றுக்கொள்வதுடன் அதற்காக விசேடமானதும் வித்தியாசமானதுமான தீர்வுகளை அபிவிருத்தியடைகின்ற மற்றும் குறைந்த மட்ட அபிவிருத்தி நாடுகளுக்கு வழங்குகின்றது. அத்தகைய விசேடமானதும் வித்தியாசமானதுமான ஏற்பாடுகள் அனைத்து அபிவிருத்தியடைகின்ற நாடுகளும் அவற்றின் செயற்பாட்டு காலத்தை தீர்மானிக்கவும் அது பற்றி உலக வர்த்தக அமைப்பிற்கு A, B, C ஆகிய மூன்று பிரிவுகளுடன் அறிவிப்பதற்கும் இடமளிக்கின்றது. பிரிவு ‘‘A’’ உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் நேரத்தில் உறுப்பினரால் நடைமுறைப்படுத்துதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. பிரிவு ‘‘B’’ உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்து வரும் மாற்றமடையக்கூடிய காலத்திற்கு பின் உறுப்பினரால் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் மற்றும் பிரிவு ‘‘C’’ உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டதை தொடர்ந்து வரும் மாற்றமடையக்கூடிய காலத்திற்கு பின்னரான ஒரு திகதியில் உறுப்பினரால் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான ஆதரவு மற்றும் உதவிகளை கையகப்படுத்தக் கூடிய ஏற்பாடுகளையும் கொண்டிருக்கின்றது. இலங்கை வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் பிரிவு ‘‘B’’ மற்றும் ‘‘C’’ இன் கீழான அதன் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக தொழில்நுட்ப உதவியையும், ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான உதவியையும் உலக வங்கி குழு மற்றும் சர்வதேச வர்த்தக மையத்திலிருந்து பெற்று வருகின்றது.

வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையின் செயல் திட்ட அறிக்கையின் முன்னிலை நடவடிக்கைகளில் தேசிய ஒருமுகச் செயல் திட்டம் மற்றும் வர்த்தக தகவல் மையம் என்பனவும் அடங்கியுள்ளன.

தேசிய ஒருமுகச் செயல் திட்டத்தின் ‘‘புளுபிரின்ட்’’ அபிவிருத்திக்காகவும், வர்த்தக தகவல் மையத்தை நிருவுவதற்காகவும் (செயற்திட்ட வேலைகள் 2017 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன) சர்வதேச ஆலோசனை வழங்கல் நிறுவனமான பீ எம் குரூப் (PM Group) உலக வங்கி குழுவினால் வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. 2018 யூலை மாதம் அளவில் தேசிய ஒருமுகச் செயல்திட்டத்தின் ‘‘புளு பிரின்ட்’’ பணிகள் நிறைவு பெற்று வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தில் ஆரம்பித்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.4 இறக்குமதி வரிக் கட்டமைப்பு

இயைபு முறையான வகைப்படுத்தல் என பொதுவாக அழைக்கப்படுகின்ற ‘‘இயைபு முறை வர்த்தப் பொருட்களின் பெயர் மற்றும் குறியீட்டு முறை” என்பது இறக்குமதி ஏற்றுமதிப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வை வரி மற்றும் ஏனைய வரிகளை அறவிடுவதற்கும், சொல்லப்பட்ட பொருட்களை அடையாளங் காணுவதற்காகவும் பயன்படுத்தபப்டுகின்ற முறையாகும். இறக்குமதி ஏற்றுமதி பற்றிய புள்ளி விபரங்களைத் திரட்டுவதற்கு இந்த முறை மிகவும் பயனுள்ளதாகும். அதன்

பிரகாரம் இலங்கை 08 குறியீட்டு இலக்கங்களைக் கொண்டுள்ள குறியீட்டு முறையை ஒதுக்கியுள்ள அதேவேளையில், இறுதி இரு குறியீட்டிலக்கங்களும் இலங்கையில் விசேட சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய உப பிரிவுகளாகும்.

வியாபார மற்றும் தீர்வை வரிக் கொள்கையானது, 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரிப் பாதுகாப்புச் சட்டம், திருத்தப்பட்ட சுங்கக் கட்டளை (235 ஆம் அதிகாரம்) சட்டம் (அட்டவணை 5.3 - இணைப்பு III), விசேட வர்த்தக பண்ட அறவீட்டுச் சட்டம், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிச் சட்டம், ஏற்றுமதி அபிவிருத்தி சபைச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கலால் வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் உள்ளடங்கியுள்ள சட்டரீதியான ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

பல்வேறுபட்ட பங்குதாரர்களின் மீதான தாக்கத்தை கவனத்திற்கொண்டு 2017 ஆம் ஆண்டில் பல்வேறு பொருட்களுக்காக வேறுபட்ட வரி வீதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஒருசில பொருட்களைத் தவிர பொதுவாக உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான மூலப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்களுக்காக பூச்சியம் அல்லது குறைந்த வரி வீதத்தையும், முடிவுப் பொருட்களுக்காக கூடிய வரி வீதத்தையும், விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இலங்கை 0,15% மற்றும் 30% எனும் மூன்று குழுக்களை உள்ளடக்கிய வரி முறையினை ஒரு சில மாற்று விகிதங்களுடன் கூடிய வர்த்தக செயற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஏற்றுக்கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு இறுதியில் ஒவ்வொரு வரி விகிதத்தின் கீழும் உள்ள இயைபுமுறைக் குறியீட்டு இலக்கங்களைக் காட்டும் வரிக் கட்டமைப்பு அட்டவணை 2.9 இல் காட்டப்படுகின்றது.

**அட்டவணை 2.9- 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வை வரிக்கட்டமைப்பு**

| இல | தீர்வை வரி வீதம் | தீர்வை வரிசைகளின் எண்ணிக்கை (இ.கு 2017:8 எண்களில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | இலவசம் | 4,064 | 54.64 |
| 2 | 5% | 2 | 0.03 |
| 3 | 10% | 9 | 0.12 |
| 4 | 15% | 1,534 | 20.62 |
| 5 | 25% | 25 | 0.34 |
| 6 | 30% | 1,454 | 19.55 |
| 7 | 75% | 03 | 0.04 |
| 8 | 85% | 01 | 0.01 |
| 8 | 125% | 05 | 0.07 |
| 9 | குறிப்பிட்ட | 72 | 0.96 |
| 10 | குறிப்பிட்ட மற்றும் பெறுமதியின் மீது | 269 | 3.62 |
| **மொத்தம்** | | **7,438** | **100.00** |

*மூலம்:வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்,2017*

**அட்டவணை 2.10 2010 முதல் 2017 வரை தீர்வை வரிக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள்**

| இல. | தீர்வை வரி வகைகள் | தீர்வை வரிசைகளின் எண்ணிக்கை (8 இலக்கங்களில்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
| 1 | இலவசம் | 4,064 | 3,938 | 3,922 | 3,410 | 3,379 | 3,024 | 3,024 | 2,967 |
| 2 | 2.5% | | | | | | | | |
| 3 | 5% | 2 | 2 | | | | 410 | 412 | 415 |
| 4 | 6% | | | | | | | | |
| 5 | 7.5% | | | | 188 | 184 | | | |
| 6 | 10% | 9 | 9 | | | | | | |
| 7 | 15% | 1,534 | 1,309 | 1,324 | 1,601 | 1,590 | 1,587 | 1,508 | 1,516 |
| 8 | 25% | 25 | 25 | | 1,450 | 1,415 | | | |
| 9 | 28% | | | | | | | | |
| 10 | 30% | 1,454 | 1,430 | 1,457 | | | 1,504 | 1,323 | 1,327 |
| 11 | ஆடம்பர விகிதங்கள் | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 |
| 12 | குறிப்பான/ அலகு வீதங்கள் | 72 | 65 | 67 | 84 | 84 | 84 | 77 | 60 |
| 13 | குறிப்பான அல்லது மதிப்பீட்டு | 269 | 255 | 186 | 184 | 183 | 200 | 162 | 193 |
| மொத்தம் | | **7,438** | **7,042** | **6,965** | **6,926** | **6,844** | **6,818** | **6,515** | **6,487** |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்,2017*

## 2.4.1 2017 இல் இயைபு முறையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட தேசிய உப பிரிவுகள்

2017 இல் வர்த்தகம், முதலீடு மற்றும் கைத்தொழில் வசதிக்காக அட்டவணை 5.1 இல் சுருக்கமாக காட்டப்பட்டுள்ளவாறான (இணைப்புI) 69 தேசிய உப பிரிவுகள் உள்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. இருப்பினும், 2017 ஆம் ஆண்டில் உலக சுங்க அமைப்பினால் இயைபு முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டதுடன் சர்வதேச ரீதியில் புதிய இயைபு முறைக் குறியீடுகள் உருவாக்கப்பட்டன. அதன்படி 2017 இல் மொத்தம் 369 இயைபுமுறைக் குறியீடுகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்டுள்ளன.

## 2.4.2 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரிப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் (சுங்க இறக்குமதித் தீர்வை) வெளியிடப்பட்ட வருமானப் பாதுகாப்புக் கட்டளையின் விபரங்கள் அட்டவணை 5.2 இல் காட்டப்பட்டுள்ளன (இணைப்பு II). 2017 இல் வர்த்தக மற்றும் கைத்தொழில் வசதியளிப்புக்காக இறைவரிப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 04 கட்டளைகள் வெளியிடப்பட்டன.

## 2.4.3 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான சட்ட ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதினூடாக மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான திருத்தங்களுடன் 2017 இல் தெரிவுசெய்யப்பட்ட விசேட வர்த்தகப் பண்டங்களின் இறக்குமதி மீது ஒரு ஒற்றை கலப்பு வரியாக விசேட வர்த்தகப் பண்ட

அறவீடானது விதிக்கப்பட்டுள்ளது. அறுவடைக் காலப் பகுதியில் (உருளைக் கிழங்கு, சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம்) உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கின்ற அதேவேளையில், நுகர்வோருக்கு தாங்கிக் கொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிக்கும் பொருட்டு வழமையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2017 இல் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 32 கட்டளைகள் மேற்கொள்ளப்பட்டன. (அட்டவணை 5.4)

## 2.5 வரி விலக்கு

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆவது அதிகாரம்) 19(அ) பிரிவின் கீழ், அமைச்சரவையினால் அங்கீகாரம் அளிக்கபட்ட விசேட கருத்திட்டங்கள் உட்பட அங்கீகாரமளித்தல் அடிப்படையில் சுங்க இறக்குமதி வரியினை விலக்களிப்பு செய்ய முடியும். அதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் வீதி, நெடுஞ்சாலை, விமான நிலையம் மற்றும் விமானச் சேவை, துறைமுகம் மற்றும் மீன்பிடித் துறைமுகம், நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனம், மின்சாரம், வீடமைப்புத் திட்டம், வைத்தியசாலை மற்றும் பல்கலைக் கழகங்களை நிர்மாணித்தல் போன்ற துறைகளுக்கான கருத்திட்டங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. 2017 இல் வழங்கப்பட்டுள்ள வரி விலக்களிப்பு பற்றிய சுருக்கமான விபரங்களின் அட்டவணை 2.11 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.11 2017 ஆம் ஆண்டில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வரி விலக்கு**

| இல. | துறை | தீர்வை வரி விலக்களிப்பின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பாதுகாப்பு | 203 |
| 2 | கல்வி | 92 |
| 3 | சுகாதாரம் | 68 |
| 4 | உட்கட்டமைப்பு | 193 |
| 5 | நீர் வழங்கல் | 270 |
| 6 | ஏனையவை | 1,219 |
| மொத்தம் | | **2,045** |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்,2017*

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் பிரகாரம், *"நியதியில் குறிப்பிடப்பட்டுள்ள யாரேனும் ஒரு நபரினால் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது அவரது பெயருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் ஒரு பொருள் நியதியில் குறிப்பிடப்படக் கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதற்காக அறவிட வேண்டிய சுங்க வரிகள் அனைத்தையும் அல்லது அதில் ஒரு பகுதியை விலக்களித்தல் பொது நலனுக்கு பொருத்தமானது என அமைச்சரினால் கருதப்படுமானால், அவரால் அவ்வாறு செய்ய முடியும்."* அதன் பிரகாரம், கௌரவ நிதி அமைச்சரக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், தீர்வை வரியை விலக்களித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட பொது வரி விலக்களிப்புகள் பற்றிய சுருக்கமான விபரம் அட்டவணை 2.12 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.12 சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சாதாரண தீர்வைவரி விலக்களிப்பு**

| இல. | விடயம் | சுங்க இறக்குமதி வரியின் அளவு | வரி விலக்கு | திரும்பப் பெறக் கூடிய சுங்க இறக்குமதி வரி | காலப் பகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | டீசல் | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 03/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 12/- | 01.02.2017 முதல் 14.12.2017 |
| | | | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 06/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 9/- | 15.12.2017 முதல் 21.12.2017 |
| | | | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 11/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 4/- | 22.12.2017 முதல் 2018 வரை பின்பற்றப்படும் |
| 2. | பெற்றோல் | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 35/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 10/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 25/- | 01.02.2017 முதல் 14.12.2017 |
| | | | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15/- | 15.12.2017 முதல் 21.12.2017 |
| | | | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 23/- | லீற்றர் ஒன்றுக்கு ரூபா 12/- | 22.12.2017 முதல் 2018 வரை பின்பற்றப்படும் |
| 3. | கோதுமைத் தானியம் | கி.கி. ஒன்றுக்கு15% அல்லது ரூபா 12/- | கி.கி. ஒன்றுக்கு ரூபா 3/- | கி.கி ஒன்றுக்கு ரூபா 09/- | 10.12.2016 முதல் 01.08.2017 |
| | | | கி.கி. ஒன்றுக்கு ரூபா 6/- | கி.கி ஒன்றுக்கு ரூபா 6/- | 02.08.2017 முதல் 2018 வரை பின்பற்றப்படும் |
| 4. | பால் மா | கி.கி. ஒன்றுக்கு 20% அல்லது ரூபா 225/- | கி.கி. ஒன்றுக்கு ரூபா 180/- | கி.கி ஒன்றுக்கு ரூபா 45/- | 20.12.2016 முதல் 07.07.2017 |
| | | | கி.கி. ஒன்றுக்கு ரூபா 223/- | கி.கி ஒன்றுக்கு ரூபா 2/- | 08.07.2017 முதல் 2018 வரை பின்பற்றப்படும் |
| 5. | முந்திரி பருப்பு | 30% | 30% | 0% | 07.10.2017 முதல் 2018 வரை பின்பற்றப்படும் |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 2017*

# 3. முதலீட்டு கொள்கை

## 3.1 வெளிநாட்டு முதலீடு

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு வெளிநாட்டு முதலீடுகளுக்காகவும், நிதி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரிடமிருந்து முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். நிதி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரிடமிருந்து முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி, தமது பரிந்துரைகளுடன் அத்தகைய முன்மொழிவுகளை வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கின்றது. குறித்த ஆண்டில் நாட்டின் ஆரோக்கியமான வெளிநாட்டு ஒதுக்கீடு பராமரிக்கப்பட்ட அதேவேளை வெளிநாட்டு முதலீடுகளுக்கான அனுமதி கட்டுப்பாட்டு முறையில் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் அட்டவணை 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1 2017 இல் அங்கீகாரம் அளிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள்**

| இல. | கம்பனி | முதலீடு செய்யப்பட்ட துறை | முதலீட்டின் பெறுமதி | நாடு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | கொட்டகலை பிளான்டேசன் | பெருந்தோட்டத் துறை | ஐ.அ.டொலர் 4 மில்லியன் | கம்போடியா | வெளிநாட்டு முதலீட்டு கணக்கிற்கு ஐ.அ.டொலர் 4 மில்லியனை மீள செலுத்துவதற்கு |
| 2 | சம்பத் வங்கி பீஎல்சீ | நிதி | பிடிரீ 131.05 மில்லியன் | பங்களாதேஸ் | லங்கா பங்களாதேஸ் பினான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் முதலீடு செய்வதற்கு |
| 3 | கார்டியன் கெபிட்டல் பாட்னர்ஸ் பீஎல்சீ | நிதி | ஐ.அ.டொலர் 7 மில்லியன் | மொரீசியஸ் | மோரிசியஸ் நாட்டிலுள்ள சீப் (SEAF) கார்டியன் லங்கா குரோத் பன்ட் இல் முதலீடு செய்வதற்கு |
| 4 | விது லங்கா பீஎல்சீ | மின்வலு | ஐ.அ.டொலர் 2.8 மில்லியன் | உகண்டா | உகண்டா நகரிலுள்ள முவும்பர் ஹைட்ரோ பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 100% பங்குரிமையை பெறுவதற்கு |
| 5 | செனிட் பிசினஸ் சொலுஷன்ஸ் | மென்பொருள் | 22% உரிமை* | சிங்கப்பூர் | பே ஏசியா பிரைவேட் லிமிடெட் |
| 6 | ஏல்ரீஈ எனர்ஜி பிரைவேட் லிமிட்டெட் | மின்வலு | ஐ.அ.டொலர் 7,818,000 | நேபாளம் | நேபாளத்திலுள்ள மேகாரி கேட் ரா ஹைட்ரோபவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் முதலீடு செய்வதற்கு |
| 7 | லக்தனவி லிமிட்டெட் | மின்வலு | ஐ.அ.டொலர் 30 மில்லியன் | பங்களாதேஸ் | 114 மெ.வோ மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக |
| 8 | ஹேமாஸ் ஏவியேசன்ஸ் | விமானச் சேவைகள் | 8000 * பங்குகள் | தாய்லாந்து | எல்ரீவீ ஏசியா ஏவியேசன்ஸ் நிறுவனத்தின் 8000 பங்குகளை பெறுவதற்கு |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்-2017*

* பெறுமதி கிடைக்கவில்லை

முதலீட்டாளர்களால் எதிர் கொள்ளப்பட்ட தவிர்க்கமுடியாத பிரச்சினைகள் காரணமாக, அவர்களால் இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட முதலீடுகளை மீள பெறுவதற்கு கோரிக்கை விடுத்தனர். செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நிதி அமைச்சரின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். அதன்படி 2017 ஆம் ஆண்டில் முதலீட்டாளர்களுக்கு தங்கள் முதலீடுகளை மீளப் பெறுவதற்கு அளிக்கப்பட்ட அனுமதி கீழேஅட்டவணை 3.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.2 2017 இல் மீளப் பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட முதலீடுகள்**

| இல. | கம்பனி | முதலீடு செய்யப்பட்ட துறை | நாடு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | ஹெரிடேஜ் ரீ | பெருந்தோட்டம் | ஹொங்கொங் | ரீடப்ளியூஜீ ஹெரிடேஜ் ரீ கம்பனி லிமிடெட் நிறுவனத்திலுள்ள 300,000 பங்குகளை மீளப் பெறுவதற்கு |
| 2 | எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | ஹோட்டல் | இந்தியா | அக்குவாசன் ஹோல்டிங்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திலுள்ள 500,000 பங்குகளை மீளப் பெறுவதற்கு |
| 3 | ஜினசேன நியூ டெக்னோலொஜி ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் | தொழில்நுட்பம் | கனடா | கம்சோ (CAMSO) நிறுவனத்திலிருந்து மீளப்பெறுவதற்கு |
| 4 | ஸ்டார் பெகேஜிங் (பிரைவேட்) லிமிடெட் | பொதியிடல் | இந்தியா | ரீகல் பெக் பொக்சஸ் நிறுவனத்தின் பங்குகளை மீளப்பெறுவதற்கு |
| 5 | லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி | நிதி | கம்போடியா | பிரசாக் மைக்ரோபினான்ஸ் நிறுவனத்தின் பங்குகளை மீளப்பெறுவதற்கு |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் 2017*

### 3.1.1 ஏற்றுமதி செயற்பாட்டு திட்டத்திற்கான இறக்குமதி (TIEP)

ஏற்றுமதி தயாரிப்புகளுககான தற்காலிக இறக்குமதி (TIEP) திட்டமானது நாட்டுக்கு போதுமானளவு அண்ணியச் செலாவணி வருமானத்தை கொண்டு வருவதற்கான ஏறறுமதியினை ஊக்குவிக்கும் ஏற்றுமதி வர்த்தக வசதியளிப்பு அளவீடொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதேபோன்று குறைந்த செலவில் இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை அனுமதிப்பதனூடாக அவர்கள் வலுவூட்டப்படுவது எதிர்பார்க்கப்பட்டது. அதன் மூலமாக அவர்களுக்கு சர்வதேச சந்தையில் போட்டியிடக் கூடியதாக உள்ளது.

இத்திட்டம் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக வரி விலக்கு அடிப்படையில் உள்ளீடுகளை இறக்குமதி செய்வதற்கு தகுதி பெறாத முதலீட்டுச் சபை சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கின்றது. முதலீட்டாளர்களின் விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் கைத்தொழில் வர்த்தக அமைச்சுக்கு வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தினால் வசதியளிக்கப்படுகின்றது.

### 3.1.2 செலாவணி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தப்பட்ட செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை நீக்குவதற்காக/குறைப்பதற்காக முதலீட்டாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகத்தர்கள், நாணய பறிமாற்றளார்களினால் செய்யப்படும் முறைப்பாடுகள் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. செலாவணிக்

கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 52(8) ஆம் பிரிவினால் கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விதிக்கப்படும் தண்டப்பணத்தை உறுதிப்படுத்துவதற்கு/நீக்குவதற்கு/ குறைப்பதற்கு கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

அதன்படி, 2017 இல் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்ட முறைப்பாடுகள் அட்டவணை 3.3. இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

**அட்டவணை 3.3 2017 இல் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்**

| இல | முறைப்பாட்டாளர் | முறைப்பாடு | செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு |
|---|---|---|---|
| 1 | ஹற்றன் நெஷனல் வங்கி | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் 42(7) ஆம் பிரிவின் கீழான முறைப்பாடு |
| 2 | டச் வங்கி | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் 52(8) ஆம் பிரிவின் கீழான முறைப்பாடு |
| 3 | போடெக்ஸ் டிரேடிங் லிமிடெட் | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் கீழான முறைப்பாடு |
| 4 | கமல் எண்டர்பிரைசஸ் | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் கீழான முறைப்பாடு |
| 5 | ஹற்றன் நெஷனல் வங்கி | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் கீழான முறைப்பாடு |
| 6 | மக்கள் வங்கி | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் கீழான முறைப்பாடு |
| 7 | சிட்டி பினான்ஸ் கோபரேசன் லிமிடெட் | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க.சட்டத்தின் கீழான முறைப்பாடு |
| 8 | ஹற்றன் நெஷனல் வங்கி | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் 52(7) ஆம் பிரிவின் கீழான முறைப்பாடு |
| 9 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் 52(7) ஆம் பிரிவின் கீழான முறைப்பாடு |
| 10 | ரோயல் மணி எக்ஸ்சேன்ஜஸ் | தண்டப்பணத்தை விலக்களிப்பதற்கான முறைப்பாடு | 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செ. க. சட்டத்தின் 52(7) ஆம் பிரிவின் கீழான முறைப்பாடு |

*மூலம்-வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்*

## 3.2 சர்வதேச ஒத்துழைப்பு

### 3.2.1 சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF)

சார்க் பிராந்தியத்தினுள் பல்வேறு நிதிகளைப் பேணுவதன் காரணமாக ஏற்படக் கூடிய பிரச்சினைகள் தொடர்பான நிலைமைகளைக் குறைக்கும் நோக்கத்துடன் சார்க் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும் நிதியிடும் வகையில் ஒரு பொறிமுறையைத் தாபிப்பதன் அவசியம் சார்க் அமைப்பின் சகல உறுப்பு நாடுகளினாலும் அறிந்து கொள்ளப்பட்டது. இவ்வாறான

பரந்த உடன்பாட்டுச் சூழ்நிலையில் சார்க் உறுப்பு நாடுகளினால் சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF) தாபிக்கப்பட்டது.

சகல நடவடிக்கைகளினதும் கூட்டிணைப்பு, கருத்திட்ட முன்மொழிவுகளை சிபாரிசு செய்தல், கருத்திட்ட முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், வருடாந்த நிதிப் பங்களிப்புகளைச் செய்தல்,சார்க் அபிவிருத்தி நிதியத்தின் அலுவலர்கள் இலங்கைக்கு வருகை தரும் போது, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவை உட்பட பல நடவடிக்கைகள் சார்க் அபிவிருத்தி நிதியத்தின் இலங்கைக்கான மறுதரப்பு முகவராக விளங்கும் இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு திறைசேரியின் பிரதிச் செயலாளர் மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் முறையே பணிப்பாளர் மற்றும் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம், குறித்த வருடத்தில் அவர்கள் அட்டவணை 3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

**அட்டவணை 3.4 2017 இல் சமூகமளித்த சார்க் அபிவிருத்தி நிதிக் கூட்டங்கள்**

| இல. | கூட்டத்தின் பெயர் | பங்கேற்பாளர் | திகதியும் இடமும் |
|---|---|---|---|
| 1 | 26வது பணிப்பாளர் சபைக் கூட்டம் | திரு. கே.ஏ. விமலேந்திரராஜா, பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி முதல் 11 ஆந் திகதி வரை, கொழும்பு, இலங்கை. |
| 2 | 27வது பணிப்பாளர் சபைக் கூட்டம் | திரு. சீ. ஜயசூரிய, மேலதிக பணிப்பாளர் நாயகம் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | 2017 யூலை 18ஆந் திகதி முதல் 19 ஆந் திகதிவரை திம்பு, பூட்டான் |
| 3 | 28வது பணிப்பாளர் சபைக் கூட்டம் | திரு. சீ. ஜயசூரிய, மேலதிக பணிப்பாளர் நாயகம் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | 2017 திசம்பர் 20 ஆந் திகதி முதல் 22 ஆந் திகதிவரை திம்பு, பூட்டான் |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்,2017*

சார்க் அபிவிருத்தி நிதியத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் செயற்படுத்துகையினை துரிதப்படுத்தும் நோக்கத்துடன், அந்தக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை உன்னிப்பாக அவதானிப்பதற்கு வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தினால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி 4 முன்னேற்ற ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சார்க் அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியுடன் பின்வரும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன;

1. சார்க் பிராந்தியத்தில் உள்ள வீட்டுக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான வாழ்வாதார முன்னெடுப்புகளை பலப்படுத்தல் (கட்டம் I மற்றும் II).
2. நோய்த்தடுப்பு உட்பட தாய் சேய் சுகாதாரத்தை பலப்படுத்தல்.
3. சிறுவர்களுக்கு எதிரான வன்முறையின் முடிவு தொடர்பான தெற்காசியாவின் முன்னெடுப்புகள் (SAIEVAC)
4. சார்க் நாடுகளிலுள்ள உற்பத்தி நீரேந்து பிரதேசங்களில் பின்-அறுவடை முகாமைத்துவம் மற்றும் பெறுமதி சேர்த்தல்.

5. இலங்கையில் நீர், துப்புரவேற்பாடு மற்றும் உடல்நலம் பேணல் சேவைகளை பலப்படுத்தல்.

### 3.2.2 சார்க் நிதி கூட்டங்கள்

சார்க் நிதி 1998 ஆம் ஆண்டு ஜுலை 29 ஆந் திகதி கொழும்பில் நடைபெற்ற 10 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மூலம் சார்க் மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதி செயலாளர்களின் பிராந்திய வலையமைப்பாக 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் 09 ஆந் திகதி நிறுவப்பட்டது. சார்க் நிதி அதன் உத்தியோகப்பூர்வ அங்கீகாரத்தை 2002 ஆம் ஆண்டு நேபால் காத்மண்டுவில் நடைபெற்ற 11 ஆவது சார்க் மாநாட்டில் பெற்றுக் கொண்டது.

சார்க் நிதி வலையமைப்பின் அடிப்படை நோக்கம் சார்க் உறுப்பு நாடுகளின் மத்திய வங்கிகள் மற்றும் நிதி அமைச்சுகளுக்கிடையே ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் மற்றும் பிராந்தியத்தினால் எதிர் கொள்ளப்படும் மைக்ரோ பொருளாதார கொள்கை சவால்களை எதிர் கொள்ளும் உறுப்பினர் நாடுகளுக்கிடையேயான அநுபவங்களை பகிர்ந்து கொள்ளல் என்பன ஆகும். சார்க் நிதியின் பரந்த நோக்கங்கள் பின்வருமாறு.

- அலுவலர்களின் வருகை மற்றும் தொடர்ச்சியான தகவல் பறிமாற்றம் மூலம் சார்க் உறுப்பு நாடுகளின் மத்திய வங்கிகள் மற்றும் நிதி அமைச்சுகளுக்கிடையேயான ஒத்துழைப்பினை ஊக்குவித்தல்.
- பிராந்தித்துடனான வங்கியல் சட்டம் மற்றும் நடவடிக்கைகளின் ஒத்துழைப்பினை முன்மொழிதல் மற்றும் ஆராய்தல்
- சார்க் பிராந்தியத்துடனான உயர் திறன் கொடுப்பனவு முறை பொறிமுறையுடன் கடமையாற்றல் மற்றும் கூடுதலான நாணய மற்றும் பறிமாற்று ஒத்துழைப்பிற்கு போராடுதலும்
- சார்க் உறுப்பு நாடுகளின் மைக்ரோ பொருளாதார கொள்கைகள் மற்றும் அனுபவங்கள் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கான கூட்டு ஒத்துழைப்பை வழங்குதல்
- நிதிக் கட்டமைப்பு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஏனைய சர்வதேச கடன் வழங்கும் முகவர்கள் இடையே எழும் பிரச்சினைகள் தொடர்பான விவாதங்கள் உள்ளடங்கலாக பிராந்தியத்தில் உலகளாவிய நிதி அபிவிருத்தி மற்றும் அதன் மூலமான பெறுபேறுகளை கண்டறிதல்
- சர்வதேச நிதி மற்றும் நாணய முறைமை சீர்திருத்தங்களை கண்காணித்தல் மற்றும் இந்த சீர் திருத்தங்கள் குறித்து சார்க் நாடுகளில் கருத்துக்களை முன்வைத்தல்
- பரஸ்பர நன்மைக்காக சர்வதேச ரீதியில் குறிப்பாக நிதிச் சேவைகள் தாராளமயமாக்கல் சூழலில், கூட்டு மூலோபாயங்கள், திட்டங்கள் மற்றும் பொது அனுகுமுறைகள் எப்பொழுது சாத்தியமாகும் என்பதை மேம்படுத்துதல்
- பொருளாதாரம் மற்றும் நிதி தொடர்பான விடயங்களில் சார்க் உறுப்பினர் நாடுகளின் நிதி அமைச்சுகள் மத்திய வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் உழியர்களை பயிற்றுவித்தல்
- சார்க் பிராந்தியத்தில் பயிற்ச்சி நிறுவனங்களின் வலையமைப்பு, பல்வேறு விடயங்களின் நிபுணத்துவம், பணரீதியான கொள்கைகள், பரிமாற்று வீத சீர்திருத்தங்கள் வங்கி மேற்பார்வை மற்றும் மூலதன சந்தை சிக்கல்களை ஆய்வு செய்தல்
- சார்க் உறுப்பு நாடுகளின் பரஸ்பர நன்மைக்கான பொருளாதார மற்றும் நிதிப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வினை ஊக்குவித்தல்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சார்க் நிதிக் கூட்டங்கள் கீழே பெயரிடப்பட்டுள்ள இத்திணைக்களத்தின் அலுவலர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

**அட்டவணை 3.5 2017 இல் நடத்தப்பட்ட சார்க் நிதிக் கூட்டங்கள்**

| இல | கூட்டத்தின் பெயர் | பங்கேற்பாளர் | திகதியும் இடமும் |
|---|---|---|---|
| 1 | 25 ஆவது சார்க் நிதி ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம் | பணிப்பாளர் (முதலீடுகள்) | 09 – 10 ஏப்ரல் மாதம் 2017, டாக்கா, வங்காளதசம் |
| 2 | சார்க் நிதி கருத்தரங்கு | பணிப்பாளர் (முதலீடுகள்) | 08 – 09 யூன் மாதம் 2017, காத்மண்டுர், நேபாளம் |
| 3 | மறுதரப்பு முகவர்களின் கூட்டம் மற்றும் சார்க் அபிவிருத்தி நிதியத்தின் இணைக் கூட்டங்கள் | பணிப்பாளர் (முதலீடுகள்) | 04 – 06 ஒக்டோபர் மாதம் 2017, திம்பு, பூட்டான் |
| 4 | 26 ஆவது சார்க் நிதி ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம் | உதவிப் பணிப்பாளர் (நிதி) | 26 – 27 ஆகஸ்ட் மாதம் 2017, கொக்ஸ் பசார் |
| 5 | மறுதரப்பு முகவர்களின் கூட்டம் மற்றும் சார்க் அபிவிருத்தி நிதியத்தின் இணைக் கூட்டங்கள் | பணிப்பாளர் (முதலீடுகள்) | 26 – 28 திசம்பர் மாதம் 2017, கொழும்பு, இலங்கை |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்,2017*

## 3.3 சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட்குதங்கள்

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விசேட தொழிற்பாடுகளுக்கு உரிய தீர்வைவரி மற்றும் கட்டணங்களை அறவிட்டதன் பின்னர் இறக்குமதிப் பொருட்களை சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட்குதங்களில் களஞ்சியப்படுத்தவோ அல்லது சேவைகளுடன் பிணைக்கப்பட்ட பண்டங்களாக வைத்திருப்பதற்கோ கௌரவ நிதி அமைச்சரின் அனுமதிக்கு உட்பட்டு குதங்கள் அல்லது இடங்கள் பெயரிடப்படும்.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம், சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு குதத்திற்குள் பண்டங்களைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல் அல்லது ஒன்றுசேர்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு அனுமதி வழங்குவதற்கு சட்ட ரீதியான அதிகாரம் உண்டு. தற்போது பின்வரும் குத வகைகள் பேணப்பட்டு வருகின்றன.

- உள்நாட்டுப் பாவனைக்கும் மீள் ஏற்றுமதி செய்வதற்குமான சீனி, அரிசி உட்பட பண்டங்களை வழங்குவதற்கான குதங்கள்
- ஏற்றுமதி முன்னுரிமை வாய்ந்த கைத்தொழில்களுக்கான பண்டங்களை வழங்குவதற்கான குதங்கள்
- சேவைக் குதங்கள், துறைமுகத்தில் அல்லது விமான நிலையத்தில் உள்ள தீர்வையற்ற கடைத் தொகுதிகள்
- கப்பல்களுக்கு / விமானங்களுக்கு பண்டங்களை வழங்குவதற்கான குதங்கள்
- குதத் திட்டத்தில் சுங்க உற்பத்திகளின் கீழான குதங்கள்
- பல்வேறு நாடுகளின் ஒருங்கிணைப்புக்கான குதங்கள்
- பயணிகளுடன் கொண்டுவராத பயணப் பொதிகளை அனுமதிப்பதற்கான குதங்கள்
- கடுகதிப் பொதிகளை அனுமதிப்பதற்கான குதங்கள் (தபால் பொதி)

இந்தத் திணைக்களத்தின் பிரதான பொறுப்பு, சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட்குதங்களின் செயற்பாடுகள் தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் பரிந்துரைகளை ஆராய்வதும் கௌரவ நிதி அமைச்சர் அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதுமாகும். 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கு 04 விண்ணப்பங்கள்

முன்வைக்கப்பட்டதுடன் அவற்றில் 01 சுங்கத் தீர்வை செலுத்தாப் பொருட் குதத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. 01 விண்ணப்பம் இலங்கை சுங்கப் பணிப்பாளரினூடாக விண்ணப்பிப்பதற்காக அனுப்பப்பட்டது. ஏனையவற்றுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மேலும், தற்போதைய தேவைப்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் சர்வதேச வர்த்தக வசதியளிப்பிற்கான முன்னுரிமை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி துறையில் உருவாகியுள்ள தேவைப்பாடுகளை கவனத்திற் கொண்டு, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ் பொது சுங்க பிணைக் குதங்களை அமைப்பதற்கான கொள்கை வரைச் சட்டகம் ஒன்றை தயாரித்துள்ளோம்.

# 4. நிர்வாகம் மற்றும் நிதி தொடர்பான செயலாற்றுகை

## 4.1 நிர்வாகம்

பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தலைமை தாங்கப்படுகின்ற இந்தத் திணைக்களம், மொத்தம் 47 பதவியினரை உள்ளடக்குகின்றது. இந்தத் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 58 ஆகக் காணப்படுகின்ற அதேவேளையில், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 11 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. பதவியணி தொடர்பான விபரங்கள் அட்டவணை 4.1 இல் காட்டப்பட்டுள்ளன. திணைக்களத்தின் உள்ளக நிர்வாகம் மற்றும் மனித வள அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் நிதி மற்றும் நிர்வாகப் பிரிவினால் கையாளப்படுகின்றன. மனித வள அபிவிருத்தி தொடர்பான புள்ளிவிபரங்கள் அட்டவணை 4.2, 4.3, 4.4, 4.5 இல் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1- 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பதவியணி**

| இல. | பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் (இ.நி.சே.- விசேட தரம்) | 01 | 01 | - |
| 2 | மேலதிக பணிப்பாளர் நாயகம் (இ.நி.சே.- விசேட தரம்) | 01 | 01 | - |
| 3 | பணிப்பாளர் (இ.நி.சே.-I) | 03 | 02 | 01 |
| 4 | பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (இ.நி.சே. II, III) | 07 | 04 | 03 |
| 5 | பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் (இ.தி.சே. II, III) | 01 | 01 | 00 |
| 6 | கணக்காளர் (இ.கண.சே.III) | 01 | 00 | 01 |
| 7 | நிருவாக அலுவலர் (அமுஉசே – விசேட தரம்) | 01 | 01 | - |
| 8 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் (த.தொ.தொ.சே 2/1) | 02 | 01 | 01 |
| 9 | ஆராய்ச்சி உதவியாளர்/அபிவிருத்தி அலுவலர் | 08 | 07 | 01 |
| 10 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 | 17 | 03 |
| 11 | சாரதி | 05 | 04 | 01 |
| 12 | அலுவலகப் பணி உதவியாளர் | 08 | 08 | - |
| **மொத்தம்** | | **58** | **47** | **11** |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் 2017*

**அட்டவணை 4.2 2017 ஆம் ஆண்டில் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அலுவலர்கள்**

| இல. | பெயர் | பதவி | இணைந்து கொண்ட திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. சீ. ஜயசூரிய | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 2017.04.18 |
| 2. | திருமதி. எம்.ஏ.சீ.என். செனெவிரத்ன | உதவிப் பணிப்பாளர் | 2017.08.13 |
| 3. | திருமதி. ஜீ.கே.சீ.கே. பிரியதர்ஷனி | முகாமைத்துவ உதவியாளர் | 2017.01.03 |
| 4. | திரு. எம்.பி.ஏ. பீரிஸ் | முகாமைத்துவ உதவியாளர் | 2017.01.06 |
| 5. | திருமதி. ஏ.டபிள்யூ.ஐ.பீ.அதுரலிய | முகாமைத்துவ உதவியாளர் | 2017.01.24 |
| 6. | திருமதி. என்.டபிள்யூ.கே.ஏ.எஸ்.சீ. அல்விஸ் | முகாமைத்துவ உதவியாளர் | 2017.05.24 |
| 7. | திரு. ஆர்.ஏ.டீ. நந்தகுமார | சாரதி | 2017.01.04 |
| 8. | திரு. எச்.டீ.என். குணசேக்கர | சாரதி | 2017.03.01 |
| 9. | திரு. டீ.ஏ. அருனஷாந்த | சாரதி | 2017.03.09 |
| 10. | திரு ஏ.ஜீ.டபிள்யூ.எம்.என். விஜேசிங்க | சாரதி | 2017.05.09 |
| 11. | திரு. கே.பீ.டீ.ஆர். கருணாநாயக்க | அலுவலகப்பணி உதவியாளர் | 2017.01.03 |

*மூலம்: வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் 2017*

**அட்டவணை 4.3 2017 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள்**

| இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. கே.டீ.என். ரஞ்சித் அசோக்க | பணிப்பாளர் நாயகம் | 2017.02.14 |
| 2. | திரு. கே.ஏ.எஸ்.கே. பெரேரா | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2017.04.19 |
| 3. | திரு. பி.பீ.சீ. குலரத்ன | பணிப்பாளர் | 2017.01.08 |
| 4. | திருமதி. டபிள்யூ.ஈ. கொடகம | கணக்காளர் | 2017.10.16 |
